1004947 **5611**

பதிவு எண் | 0 | 1 | 4 | 4 | 7 | 7 |

*www.tnschools.co.in* *March 2016*

# பகுதி I – தமிழ் – இரண்டாம் தாள்

(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

# Language – Part I – TAMIL – Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளின் **மிகாது** விடை எழுதுக. **3x4=12**

1. நாடகத் தமிழின் சிறப்பியல்புகள் யாவை ?
2. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்கள் யாவை ?
3. 'கவிதை என்பது யாது'? என்ற வினாவிற்கு வோர்ட்ஸ்வொர்த், கோலரிட்ஜ் ஆகியோர் கூறும் விளக்கங்கள் யாவை?
4. நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க. உரைப்பன யாவை ?
5. பழந்தமிழர் மேற்கொண்ட தொழில்கள் யாவை ?

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளின் **மிகாது** விடை எழுதுக. 3x4=12

6. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் கூறுவன யாவை ?

7. செல்வம் நிலைபேறு உடையதன்று என்பதனை நாலடியார் எங்ஙனம் நயம்பட நவில்கின்றது ?

8. ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ. காட்டும் வழிகள் யாவை ?

9. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எது ? ஏன் ?

10. மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு என்பதனைப் பாவாணர் கூறுமாறு யாங்ஙனம் ?

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் **இருபது** வரிகளின் **மிகாது** விடை எழுதுக. 1x6=6

11. தமிழ் - உயர்தனிச் செம்மொழி - இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து எழுதுக.

12. கோயிற் கட்டடக் கலை பற்றி விளக்கி வரைக.

IV. பின்வரும் வினாக்கள் **ஒவ்வொன்றிற்கும் இரண்டு** பக்கங்களுக்கு **மிகாமல்** விடை எழுதுக. 2x10=20

13. 'மண்' அல்லது 'ஒவ்வொரு கல்லாய்' என்னும் சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

**அல்லது**

'உல்லாசப் பயணம்' அல்லது 'பழிக்குப்பழி' என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'மகன்' அல்லது 'சட்டை' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

அல்லது

கோமதி மருமகளை வேறுபாடு கருதாமல், அன்பு பாராட்டி ஏற்றுக் கொண்டதாக கற்பனையாக ஒரு கதையெழுதுக.

அல்லது

மூக்கப்பிள்ளை ஊரோடு ஒத்துப்போகின்ற மனநிலையைப் பெற்று புதிய மனிதராக வாழ்க்கையைத் தொடர்ந்தமை போன்று கற்பனைக் கதை எழுதுக.

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. **1x10=10**

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்.
உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்

- பாரதியார்

[ திருப்புக

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் **VI** மற்றும் **VII** வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

**VI.** பின்வரும் தொடர்களில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. **3x2=6**

**16.** Knowledge is Power.

**17.** Look before you leap.

**18.** Physics is closely linked with other Sciences.

**19.** No pain no gain.

**20.** Tsunami means killer waves of the harbour.

**21.** Many thanks for your kind message of greetings.

**VII. 22.** பின்வரும் பழமொழிகளுள் **ஒன்றினை** விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து (பத்து வரிகளில்) எழுதுக. **1x4=4**

(அ) சிறுதுளி பெருவெள்ளம்

(ஆ) மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

(இ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

**அல்லது**

'மழை' அல்லது 'விழித்திரு' என்னும் தலைப்பில் சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றினை எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x2=10

**VI** மற்றும் **VII**-ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் **16** முதல் **22** வரை உள்ளவற்றில் எவையேனும் **ஐந்தனுக்கு மட்டும்** ஏற்ற விடையை எழுதுக.

''எழில் மிகுந்த விலங்குகளும் பறவைகளும் இல்லாவிடின் நமது வாழ்க்கையே பயனற்றுப் போய்விடும். ஆகவே, எஞ்சியுள்ள விலங்குகளைப் பாதுகாப்பதற்காகப் பெருமளவிற்குச் சரணாலயங்கள் ஏற்படுத்த நாம் முயல வேண்டும்'' எனக் கூறினார் அமரர் நேரு. அவருடைய வாக்கு நிறைவேறும் வகையில் நமது அரசியலார் ஆங்காங்குப் பறவை பாதுகாப்பு நிலையங்களையும் வனவிலங்குச் சரணாலயங்களையும் அமைத்து வருகின்றனர். இந்தியாவின் தேசியப் பறவையாக மயிலும் தேசிய விலங்காகப் புலியும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

வன விலங்குகளாலும், பறவைகளாலும் நமக்கு உண்டாகும் பயன்கள் எண்ணற்றவை. பறவைகள் நாட்டிற்கு அழகையும் பொலிவையும் தருகின்றன. விலங்குகள் மனித வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையவை. யானைத் தந்தம், புலித்தோல், மான்தோல், மான்கொம்பு, கவரிமான் மயிர் முதலிய பல்வகைப் பொருட்கள் விலங்கு தரும் செல்வங்கள்.

மனிதனது பண்பற்ற செயல்களால் விலங்குகளும் பறவைகளும் நாளுக்கு நாள் நலிந்தும் அழிந்தும் வருகின்றன. வேட்டையாடியும் பொழுது போக்குக்காகவும் மக்கள் காடுகளையும் விலங்குகளையும் அழித்து விட்டனர். எனவே விலங்குகளைப் பாதுகாக்கச் சரணாலயங்கள் அமைக்க வேண்டியது அவசியம் என அரசியலார் கருதினர்.

மைசூருக்கு அருகில் முதுமலையில் ஒரு சரணாலயம் உள்ளது. இதில் ஏராளமான யானைகளும், விலங்குகளும் பாதுகாக்கப்படுகின்றன. மகாராட்டிர மாநிலத்தில் பல வகை விலங்குச் சரணாலயங்கள் உள்ளன. இந்தியாவிலேயே 'கன்ஹா' தேசிய வனம் மிகச் சிறந்த சரணாலயமாக மதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள வேடந்தாங்கலில் பல்லாயிரக்கணக்கான மைல் தொலைவிலிருந்து அயல்நாட்டுப் பறவைகளும் வந்து தங்கிச் செல்கின்றன.

**வினாக்கள் :**

**16.** வனவிலங்குகளைப் பாதுகாக்க யாது செய்ய வேண்டும் என்று அமரர் நேரு கூறுகின்றார் ?

**17.** இந்தியாவின் தேசியப் பறவை மற்றும் தேசிய விலங்கினைக் குறிப்பிடுக.

**18.** வன விலங்குகளின் பயன்கள் யாவை ?

[ திருப்புக

19. விலங்குகளும், பறவைகளும் அழிவதற்குக் காரணம் யாது ?

20. பல வகை விலங்குச் சரணாலயங்கள் எங்கு உள்ளன ?

21. இந்தியாவின் மிகச் சிறந்த சரணாலயம் எது ?

22. வேடந்தாங்கலின் சிறப்பு யாது ?

**VIII.** பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. **10x1=10**

23. இந்த செஞ்சுரி டென்ஷன் நிறைந்தது.
(ஆங்கிலச் சொற்களை நீக்கி எழுதுக.)

24. கோளி முட்டை தாவாரத்தில் உருண்டது.
(கொச்சைச் சொற்களைத் திருத்துக.)

25. நீரோச் சோறோ எதுக் கிடைத்தாலும் உண்டுச் செல்வோம்.
(தேவையற்ற வல்லின மெய்களை நீக்கி எழுதுக.)

26. நான் சொல்வது எனக்காக அல்ல.
(பிழைகளை நீக்கி எழுதுக.)

27. விசாலாட்சி, மீனாட்சியை தரிஷித்து வந்தேன்.
(வடசொற்களை நீக்கி நல்ல தமிழில் எழுதுக.)

28. பட்ட பகலினிலே பாவலர்க்கு தோன்றுகிற நெட்டை கனவு.
(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.)

29. தலை - தழை அல்லது பணி - பனி.
(பொருள் வேறுபாட்டை உணர்ந்து அதனைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.)

www.tnschools.co.in



30. மாந்தோட்டத்தில் நாய் கத்தியது.
(மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.)

31. ஆற்றில் வெல்லம் கறைபுரண்டு ஓடுகிறது.
(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக.)

32. பாரதியார் நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்றார்.
(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக.)

-oOo-